**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4443/ஆ5/2024, நாள்.07/11/2024**

*****

பொருள் பள்ளிக் கல்வி – தேசிய மக்கள் தொகை கல்வித் திட்டம் – வளரிளம் பருவக் கல்வி தொடர்பான நாட்டுப்புற நடன (Folk Dance) போட்டி நடத்துதல் – அரசு நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 8ம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் பங்குபெற தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை

1. சென்னை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.20643/ ஜி3/2024, நாள். 24.10.2024
2. இராணிப்பேட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரின் கடித ந.க.எண்.512/ அ2/2024, நாள். 05.11.2024

*****

பார்வை 1–ல் காணும் செயல்முறைகள் மற்றும் பார்வை 2–ன் கடிதத்தில், 2024–2025–ம் கல்வியாண்டில் வளரிளம் பருவக் கல்வி சார்ந்த நாட்டுப்புற நடன போட்டி (Folk Dance) அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 8ம் வகுப்பு மற்றும் 9–ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு நடத்தப்படுகிறது.

வளரிளம் பருவக் கல்வி சார்ந்து சார்ந்த நாட்டுப்புற நடன (Folk Dance) போட்டியினை பள்ளி அளவில் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் நடத்தப்பட வேண்டும். பள்ளிகள் நாட்டுப்புற நடனப் போட்டியை அந்தந்தப் பள்ளிகளில் நடத்தி மிகச்சிறந்த ஓர் அணியை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க செய்தல் வேண்டும்.

**போட்டிகளுக்கான கால அட்டவணை –**

| **போட்டிகள்** | **நாள்** | **இடம்** |
|---|---|---|
| பள்ளி அளவில் | 12.11.2024–க்குள் (செவ்வாய் கிழமை) | அந்தந்தப் பள்ளிகள் |
| மாவட்ட அளவில் | 22.11.2024 | அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர். |
| மாநில அளவில் | 28.11.2024 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் , திருச்சிராப்பள்ளி தெரிவு செய்யும் ஒரு மையம் |
| தேசிய அளவு | ஜனவரி 2025 | NCERT புதுடெல்லி |

**நாட்டுப்புற நடனப் போட்டி கீழ்காணும் ஐந்து தலைப்புகளின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்**

1. மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சமமான வாய்ப்பு
2. குழந்தையின் வளர்ச்சியில் கூட்டுக் குடும்பத்தின் பங்கு
3. சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல் (குப்பைகளைக் குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல்)
4. போதைப்பொருளின் பயன்பாட்டினைத் தடுத்தல்
5. வளரிளம் பருவத்தில் ஆரோக்கியமான உறவுமுறைகள்

**பள்ளிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் –**

1. நாட்டுப்புற நடனப் போட்டி அரசுப் பள்ளிகளில் 8–9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்பட வேண்டும்.
2. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து தலைமையாசிரியரால் நியமிக்கப்பட்ட ஆசிரியரின் உதவியுடன் மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும்.
3. பங்கேற்கும் குழுவினர் – ஒரு அணியில் 4 முதல் 6 மாணவ / மாணவிகள் மட்டும் இடம் பெற வேண்டும்.

4. இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் தாங்கள் தெரிவு செய்த தலைப்புக்கேற்றவாறு நாட்டுப்புற நடனத்திற்கான சிறப்பு உடை அலங்காரம், ஒப்பனை ஆகியவற்றை தாங்களே செய்து கொள்ள வேண்டும்.
5. பள்ளிகள் நாட்டுப்புற நடனப் போட்டியை அந்தந்தப் பள்ளிகளில் நடத்தி மிகச் சிறந்த ஓர் அணியினை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள ஆசிரியரின் துணையுடன் தலைமையாசிரியர் அனுப்பி வைக்க வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் மற்றும் ஆண் குழந்தைகள் அக்குழுவில் இருந்தால், ஓர் ஆண் ஆசிரியர் மற்றும் ஒரு பெண் ஆசிரியர் மாவட்ட அளவிலான போட்டிக்கு மாணவ / மாணவிகளை அழைத்துச் செல்ல வேண்டும். இதுபோலவே, மாவட்ட அளவில் முதலிடம் பெறும் அணி, ஆசிரியரின் துணையுடன் மாநில அளவிலான நாட்டுப்புற நடனப் போட்டியில் கலந்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.
6. மாநில அளவிலான நாட்டுப்புற நடனப் போட்டி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் தெரிவு செய்யும் மையத்தில் நடத்தப்படும். வெளியூரிலிருந்து வரும் ஆசிரியர்கள் மாணவ / மாணவிகளுக்கு தங்குமிட வசதி (Refresh) ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
7. மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படி வழங்கப்படமாட்டாது.
8. மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ / மாணவியர்களுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கட்டணம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும்.

பள்ளி அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு முதலிடம் பெறும் அணிகள் மாவட்ட அளவில் கலந்துக் கொள்ள ஏதுவாக அதன் விவரத்தினை dietvlr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் பள்ளி மாவட்ட அளவில் போட்டியில் பங்கேற்கும் என்ற விவரத்தை அனுப்புமாறு அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையில் காணும் கடித நகல்

8.11
07.11.24

7/11/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்–

1. சென்னை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இராணிப்பேட்டை மாவட்டம். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை/ தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படுகிறது.)
4. தலைமையாசிரியர்,
   அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )